**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | C C 362 / 2023 |
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W 10 |
| Name | : | சந்தோஷ்குமார் |
| Father Name | : | கணேஷ்ஷா |
| Village | : | மொத்தகான்மால் |
| Taluk | : | தாராம்பூர், முசாப்பர்பூர் மாவட்டம். |
| Calling | : | தனியார் நிறுவன தட்டச்சர் |
| Age | : | 23 |
| ACCUSED | ஆசிம்கான்- ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.10.2025

சாட்சிக்கு இந்தி மொழி மட்டுமே தெரியும் என்பதால் மொழிப்பெயர்ப்பாளர் உதவியுடன் சாட்சியத்தை பதிவு செய்து கொள்ள அனுமதி கோரி அரசு தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு அனுமதிக்கப்பட்டது. அதன்படி பெரம்பலூர் கோல்டன் கேட்ஸ் வித்யாசரம் மேல்நிலைப்பள்ளி ஹிந்தி மொழி ஆசிரியை திருமதி. விஜயா என்பவர் இந்நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி சாட்சி ஹிந்தியில் சொன்ன வார்த்தைகளை தமிழில் மொழி பெயர்த்துக்கொடுக்க அதன் அடிப்படையில் மேற்படி சாட்சியம் பதிவு செய்யப்படுகின்றது.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது கோபாலபுரத்தில் உள்ள எம்ஆர்எப் கம்பெனியில் தட்டச்சராக பணிபுரிந்து வருகின்றேன். வழக்கு விபத்தில் இறந்து போன ராம்பிரவேஷ்குமார் என்பவரை எனக்கு தெரியும், அவர் என்னுடைய மாமா ஆவார். 08.10.2022–ம் தேதி, காலை 10.30 மணியளவில் விஜயகோபாலபுரத்தில்

உள்ள எம்ஆர்எப் கம்பெனியில் TCR Plant–ல் வேலை பார்க்கும் போது இறந்து போனார். நான் மேற்படி எம்ஆர்எப் தொழிற்சாலையின் உள்ளே வேலை பார்த்துக்கொண்டிருந்த போது வெளியில் உள்ள TCR Plant–ல் எனது மாமா ராம்பிரவேஷ்குமார் இறந்து போனதாக அங்கே வேலை பார்த்த நபர்கள் என்னிடம் வந்து சொன்னார்கள். அதன் பேரில் நான் அங்கு சென்று பார்த்த போது அவரை ஆம்புலன்சில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்து சென்று கொண்டிருந்தார்கள். எனது மாமா ராம்பிரவேஷ்குமார் TCR Plant–ல் நடந்து சென்று கொண்டிருந்த போது அங்கிருந்த கிரேனை இயக்கிக்கொண்டிருந்த டிரைவர் வாகனத்தை ஓட்டிக்கொண்டு வந்து மோதியதில் சக்கரம் ஏறி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். மேற்படி விபத்தில் அவருக்கு வலது காலில் மேற்படி கிரேனின் சக்கரம் ஏறியதால் விபத்து ஏற்பட்டது. மேற்படி கிரேனை ஓட்டிய ஓட்டுநரின் பெயர் ஆசிம்கான் என்று தெரிந்து கொண்டேன். விபத்து ஏற்பட்டு எனது மாமா ராம்பிரவேஷ்குமார் 10 நாட்கள் கழித்து மருத்துவமனையில் இறந்து விட்டார். போலீசார் விபத்து நடைபெற்ற விபரம் குறித்து என்னிடம் விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை:– (எதிரி தரப்பில்)</u>**

இல்லை.

**ஒப்பம்/–கி.முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**